# COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,
# KANNIYAKUMARI AT NAGERCOIL.

25.06.2025

O.S.. No. 342/2023

P.W.1 திரு.ரமேஷ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

27.06.1981 ஆம் தேதியிட்ட ஷீலா மோசஸ் பெயரிலான கிரய ஆவணம் பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 1 ஆகவும், 24.03.1998 ஆம் தேதியிட்ட G.S. சிவதாணு பெயரிலான கிரய ஆவணம் சான்றிட்ட பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 2 ஆகவும், 11.02.2004 ஆம் தேதியிட்ட வாதி நிறுவனமான M/s. ஜெய்ஹிந்த் வயர் ராட் மில்ஸ் லிட் - க்கு G.S. சிவதாணு ஏற்படுத்திக் கொடுத்த கிரய ஆவணம் பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆகவும், 31.03.2005 ஆம் தேதியிட்ட வாதிக்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கும் ஏற்படுத்தப்பட்ட காற்றாலை ஒப்பந்த நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 4 ஆகவும், 19.04.2005 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கிய ஆணையிடும் சான்றிதழ் மற்றும் ஆட்சேபனை இல்லா சான்று நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 5 ஆகவும், 13.08.2008 ஆம் தேதியிட்ட N. வள்ளிகுமாரிக்கு P. சாந்தா வழங்கிய பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 6 ஆகவும், 13.08.2008 ஆம் தேதியிட்ட N. வள்ளிகுமாரிக்கு G.S. சிவதாணு வழங்கிய பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 7

ஆகவும், 24.09.2008 ஆம் தேதியிட்ட M/s. Auro Mira Bio Systems Pvt. Ltd., -க்கு பொது அதிகார முகவர் N. வள்ளிக்குமாரி எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 8 ஆகவும், 25.07.2014 ஆம் தேதியிட்ட பிரதிவாதி வங்கிக்கு ஆதரவாக M/s. Auro Mira Bio Systems Pvt. Ltd., எழுதிக் கொடுத்த அடமான ஆவணம் பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 9 ஆகவும், 22.04.2023 ஆம் தேதியிட்ட 4 வது பிரதிவாதிக்கு ஆதரவாக பிரதிவாதி வங்கியால் வழங்கப்பட்ட விற்பனை சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 10 ஆகவும், 23.05.2023 ஆம் தேதியிட்ட வருவாய் அதிகாரிகளால் நடத்தப்படும் ஜமாபந்தியில் மனுதாரரால் அளிக்கப்பட்ட மனு நகல் வா.சா.ஆ. 11 ஆகவும், 19.07.2023 ஆம் தேதியிட்ட கன்னியாகுமரி மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர், நாகர்கோவில் அவர்கள் Crl.M.P. No. 9727/2023-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 12 ஆகவும், 27.07.2023 ஆம் தேதியிட்ட வாதி நிறுவனத்தால் வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்ட கடிதம் அசல் வா.சா.ஆ. 13 ஆகவும், 30.07.2023 ஆம் தேதியிட்ட வாதி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு அளித்த ஆட்சேபனை மற்றும் ரசீதுகள் அசல் வா.சா.ஆ. 14 ஆகவும், 02.08.2023 ஆம் தேதியிட்ட கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தலைமை நீதித்துறை நடுவர் கோப்பில் மனுதாரர் தாக்கல் செய்த பிரமாண பத்திரம் மற்றும் மனு திருப்பப்பட்ட ஒப்புதல் அசல் வா.சா.ஆ. 15 ஆகவும், 04.08.2023 ஆம் தேதியிட்ட NHAI ஆணையத்ததால் பதிவு செய்யப்பட்ட உத்தரவு பதிவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 16 ஆகவும், வில்லங்க சான்றுடன், பட்டா மாற்றுவதற்கான உத்தரவு பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 17

ஆகவும், கூட்டுப்பட்டா நகல் பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 18 ஆகவும், NHAI ல் நிலம் கையகப்படுத்தப்பட்டதற்கான வில்லங்க சான்றிதழில் உள்ள உள்ளீடுகள் வா.சா.ஆ. 19 ஆகவும், மாதிரி வரைபடம் வா.சா.ஆ. 20 ஆகவும், போட்டோக்கள் வா.சா.ஆ. 21 ஆகவும், 31.10.2023 ஆம் தேதியிட்ட W.P. (MD) No. 19572/2023 & 19573/2023 ன் உத்தரவு உண்மை நகல் வா.சா.ஆ. 22 ஆகவும் மற்றும் சிடி வா.சா.ஆ. 23 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.